வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 26.02.2026 வியாழக்கிழமை இதழ் : 52 பக்கங்கள் : 08




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## சுரேஷ் சாலே கைதில் அரசியல் உள்நோக்கம்!

### எதிர்க்கட்சிகள் கண்டனம்

கொழும்பு, பெப். 26

அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் கைது மற்றும் நிலக்கரி இறக்குமதி மோசடி தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோர் அரசாங்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை இருக்கவேண்டுமாயின், தற்போதைய பாதுகாப்பு தரப்பில் உள்ள முக்கிய அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தத் திடீர் கைது நடவடிக்கை என்பது நாட்டில் தற்போது பேசுபொருளாகியுள்ள நிலக்கரி ஊழலை திசை திருப்புவதற்கான ஒரு முயற்சியே என எதிர்க்க தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.


எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளு மன்ற உறுப்பினர்களான முஜிபுர்

07

### ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் திடீர் திருப்பம்

# அரச புலனாய்வின் முன்னாள் பிரதானி சுரேஸ் சாலே கைது!

### போதிய ஆதாரங்கள் உண்டு என்கிறது பொலீஸ் தரப்பு



கொழும்பு, பெப்.26

கடந்த 2019 ஆம் ஆண்டு முழு நாட்டையும் உலுக்கிய உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புத் தாக்குதல் குறித்த விசாரணைகளில் அதிரடித் திருப்பமாக அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே பேலியகொடை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை பேலியகொடை பகுதியில் வைத்து சுரேஸ் சாலே கைது செய்யப்பட்டார் என்பதைப் பொலீஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கை வரலாற்றில் இடம் பெற்ற மிகமோசமான பயங்கரவாதத் தாக்குதல் என்று குறிப்பிடப்படும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான தகவல்களை அறிந்திருந்த போதிலும், தாக்குதலைத் தடுக்கத் தவறிவிட்டார் என்று மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன. அக் குற்றச்சாட்டுகளை அவர் அடியோடு மறுத்திருந்தார்.

எனினும், உயிர்த்த ஞாயிறு

07

## அமைச்சர்களுக்கு உயிராபத்து!

கொழும்பு, பெப். 26

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜே பால மற்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல ஆகியோருக்கு விடுக்கப்பட்டுள்ள உயிர் அச்சுறுத் தல்கள் குறித்து

07

## இலங்கை நிலைமை குறித்து இன்று நோர்வே பாராளுமன்றில் விவாதம்!

கொழும்பு, பெப். 26

இலங்கையின் அண்மைய போக்குகள் குறித்து நோர்வே பாராளுமன்றத்தில் இன்று விவாதிக்கப்படவுள்ளது.

இலங்கையில் தேர்தல் இடம்பெற்று ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் நோர்வே பாராளுமன்றத்தில் இடையீட்டு விவாதமாக இலங்கை சம்பந்தமாக விவாதிக்கப்படவுள்ளது.

நோர்வே தொழிற் கட்சியை சேர்ந்த இலங்கையை பூர்வீகமாக கொண்ட நோர்வே பாராளுமன்ற உறுப்பினரான அம்சி குணரத்னம் இவ்விவாதத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

07

## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவுக்கு தமிழகத்திலிருந்து 3,996 யாத்திரிகர்கள்!

யாழ்ப்பாணம், பெப். 26

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக, தமிழகத்திலிருந்து 3 ஆயிரத்து 996 யாத்திரிகர்கள் நாளை வியாழக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

வரலாற்றுப் புகழ்பெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா, நாளை கொடியேற்றத்துடன் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆன்மீக நிகழ்வில் பங்கேற்பதற்காகவே தமிழகத்திலிருந்து பெருமளவிலான பக்தர்கள் கடல் வழியாக வருகை தருகின்றனர்.

07

## முல்லைத்தீவு விபத்தில் பெண் பலி!

முல்லைத்தீவு, பெப். 26

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு, புளியடி பகுதியில் வீதியை கடக்க முற்பட்ட குடும்பப் பெண்ணை மோட்டார்

07

## மாவட்ட செயலகம் பரிந்துரைக்கும் காணிகளை வனவளத் திணைக்களம் விடுவிப்பது அவசியம்!

### கிளிநொச்சியில் வடக்கு ஆளுநர் திட்டவட்டம்



கிளிநொச்சி, பெப். 26

மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்களுக்கான ஆவணங்கள் இல்லையென்பதைக் காரணங் காட்டி, அக்காணிகளை விடுவிக்க வனவளத் திணைக்களம் மறுப்புத்

07

## மார்ச் 1 - 7 தேசிய போதை தடுப்பு வாரம்

கொழும்பு, பெப். 26

போதைப் பேரழிவில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்றிட்டத்தின் கீழ் எதிர்வரும் மார்ச் 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையான ஒரு வார காலப்

07

## 'குஸ்' பொருளுடன் கிளிநொச்சியில் சிங்கள மாணவர்கள் இருவர் கைது!



கிளிநொச்சி, பெப். 26

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை இரு சிங்கள மாணவர்கள் குஸ் வகை போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

07

## அரசியலுக்காக தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படக்கூடாது!

### சாலே கைதைக் கண்டித்து அலி சப்ரி அறிக்கை

கொழும்பு, பெப். 26.

அரசியல் இலாபங்களுக்காக நாட்டின் தேசிய பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படக்கூடாது என்று முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக, இலங்கை அரச புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே கைது செய்யப்பட்டமை குறித்து முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி

07

## மின்சார சபை ஊழியர்கள் இன்று அடையாள பணிப்புறக்கணிப்பில்!

கொழும்பு, பெப். 26


இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் இன்று அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளன.

அவை இன்று நண்பகல் 12:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை 6 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை

07

## யாழில் பெண்ணின் சங்கிலி அறுத்த இராணுவச் சிப்பாய் உடனே கைது!



யாழ்ப்பாணம், பெப். 26

சுன்னாகம் நகரப் பகுதியில் சங்கிலி திருட்டில் ஈடுபட்ட இராணுவ முகாமில் கடமையாற்றிய ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை சுன்னாகம் நகரப் பகுதியில்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆழ்கடல் பகுதியில் புதிய காற்றாலை மின் திட்டம்!


## மக்களே இல்லாமல் நடந்த கருத்து கேட்பு கூட்டம்

மன்னார், பெப். 26

மன்னார் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலைகளுக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்த நிலையில், தற்போது ஆழ்கடலில் புதிய காற்றாலை மின் திட்டத்தை அமைப்பதற்கான முதற்கட்ட நகர்வுகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

உலக வங்கியின் நிதி உதவியுடனும், பிரித்தானிய தூதரகத்தின் பங்களிப்புடனும் மன்னார் ஆழ்கடல் பகுதியில் இந்த காற்றாலை மின் திட்டம் அமையவுள்ளது.

இது தொடர்பான சாத்தியவள ஆய்வுகள் மற்றும் கலந்துரையாடல்கள் மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றன.



இந்த கூட்டத்தில் பிரித்தானிய வர்த்தக பிரதிநிதி தெரேசா ஓமஹோனி மற்றும் சர்வதேச பொறியியலாளர்கள் கலந்துகொண்டு திட்டத்தின் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து அரச அதிகாரிகளுக்கு விளக்கமளித்தனர்.

ஏற்கனவே மன்னார் நிலப்பரப்பில் அமைக்கப்பட்ட காற்றாலைகளால் சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அப்பகுதி மக்கள் நீண்ட காலமாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இத்தகைய சூழலில், மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி அரசாங்கம் மீண்டும் ஒரு காற்றாலை மின் திட்டத்தை, அதுவும் கடல் பகுதியில் அமைக்க முற்படுவது மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத் தியுள்ளது.

அதே நேரம் கலந்துரையாடலில் அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான குரலாக விளங்கும் சமூகப் பிரதிநிதிகளோ அல்லது போராட்டக் குழுக்களோ பொது அமைப்புக்களோ இந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை.

காற்றாலை மின் திட்டங்களுக்கு மன்னார் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் உள்ள எதிர்ப்பு தொடர்பிலும் அரச அதிகாரிகளால் உரிய தரப்பினருக்கு குறித்த கூட்டத்தில் தெளிவுபடுத்தப்படவில்லை எனக் கூறப்பட்டது. (அ)

# தேசிய மின்சக்தி கொள்கை அமைச்சரவைக்கு வரவில்லை

## மின்சார சபை மறுசீரமைப்பு தாமதம்

கொழும்பு, பெப். 26

தேசிய மின்சக்தி கொள்கை இம்முறையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும், தேசிய மின்சக்தி கொள்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனால்,தேசிய மின்சக்திக் கொள்கைக்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது மேலும் தாமதமடைந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதுடன், இலங்கை மின்சார சபை கலைக்கப்படும் திகதியை அறிவிப்பதும் பிற்போடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் வேலைத்திட்டம் 5 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டதுடன், அவற்றில் 4 கட்டங்கள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

தேசிய மின்சக்தி கொள்கையைத் தயாரிக்கும் பணிகளும் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னரே இலங்கை மின்சார சபை கலைக்கப்படும் திகதி அறிவிக்கப்படவுள்ளது. (அ)

# மன்னாரில் பல வீதிகளுக்கான அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்



மன்னார், பெப். 26


மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எருவிட்டான் கிராமத்தில் 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைப்புப் பணி நேற்று முன் தினம் மாலை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த வீதி புனரமைப்புப் பணிகளுக்காக 57.82 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் , பிரதேச சபை உறுப்பினர்கள் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பல்வேறு வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்.வந்த ஜேர்மன், பிரான்ஸ் தூதர்கள் மாநகர முதல்வருடன் சந்தித்து பேச்சு



யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் தூதுவர்கள், யாழ் மாநகர முதல்வர் வி.மதிவதனியைச் சந்தித்து தற்போதைய நிலவரம் தொடர்பில் கேட்டறிந்தனர்.

மாநகர சபை அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மாநகர ஆணையாளர், பிரதி முதல்வர் ஆகியோருடன் பிரதம பொறியியலாளரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாநகர சபைப் பகுதியில் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி, அதனை தீர்ப்பதற்கு சபை எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றுடன் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாட்டிற்கு மத்திய அரசின் உறுதுணை போன்றவற்றை தூதுவர்கள் கேட்டறிந்தனர். (அ)

# ஜோசிதவின் பாட்டி விடுதலை!

கொழும்பு, பெப். 26

நிதிச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து யோஷித ராஜபக்ஷவின் பாட்டியான டெய்சி பொரஸ்ட்டை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கில் யோஷித ராஜபக்ஷவிற்கு எதிராக மாத்திரம் குற்றச்சாட்டுகளைத் தொடரப் போவதாக சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்ததைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

98 வயதான டெய்சி பொரஸ்ட்,

விசாரணை களை எதிர்கொள்ளும் அளவிலான மனநிலையில் இல்லை என அவரது தரப்பு சட்டத்தரணிகள் ஏற்கனவே நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்படி, டெய்சி பொரஸ்ட் வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளார். (அ)

# யாழின் உள்ளூர் போக்குவரத்து சேவைகள் தொடர்பில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 26

போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இணைந்து நடத்தும் உள்ளூார் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்குபடுத்தல் பிராமணங்கள் தொடர்பான அறிவூட்டல் கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது.

மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் ம.பிரதீபனின் ஒழுங்குபடுத்தலில், இடம்பெற்ற கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆணையாளர், துறைசார் அதிகாரிகள், யாழ் மாவட்ட அரச, தனியார் போக்குவரத்து சேவை சாலைகளின் அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாவட் டத்தின் மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள் என சமூக மக்களுடன் நெருக்கமான தொடர்பை கொண்டுள்ள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

மூன்று பிரதான விடயங்களை முன்னிறுத்தி இடம்பெற்ற கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களுக்கான இலகு போக்குவரத்து சேவை குறித்தும், பொது மக்களின் நாளாந்த சேவை பெறுதலை தடையின்றி உறுதிப்படுத்துவதும், அது தொடர்பில் இருக்கின்ற சாதக பாதக நிலைமைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் சாரதிகள் நடத்துனர்களுக்கு சீருடை, ஜி.பி.எஸ் சாதனம் பொருத்தல், சிசு செரிய, கெமி செரிய, நசி செரிய சேவைகள் போன்றவற்றின் பலன்கள், அது தொடர்பான மானியங்கள் கிடைக்காமை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதுடன் அதைப் பெறுவதில் இருக்கின்ற தடைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டது. (அ)

# 12,301 வீடுகள் வசிப்பதற்கு பொருத்தமானவை அல்ல!

கொழும்பு, பெப். 26

அதிக ஆபத்துள்ள பகுதிகளில் அமைந்துள்ள 12,301 வீடுகள் மக்கள் வசிப்பதற்குப் பொருத்தமானதல்ல அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இதனை தெரிவித்துள்ளது.

மண்சரிவு ஆபத்துள்ள பகுதிகளில் அமைந்துள்ள குறித்த 12,301 வீடுகளும் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்றது என்பதால் அங்குள்ள மக்களை உடனடியாக வெளியேற்றவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அவர்களுக்கான மாற்று இடங்களை காண் பிக்க நடவடிக்கை எடுக்கப்ப டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.02.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ் தேசிய பேரவை தலைவர்களின் கவனத்துக்கு...!

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் தமிழ் தேசிய பேரவையின் தூதுக்குழு சென்னைக்கு சென்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஆதரவுகோரி பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்ராலின் ஜனவரி நடுப்பகுதியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்றை எழுதினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்தியிருப்பதாக (தவறாக) கடிதத்தில் குறிப்பட்ட முதலமைச்சர் கூட்டாட்சி (சமஷ்டி) ஏற்பாட்டின் அடிப்படையில் இனப்பிரச்னைக்கு தீர்வொன்றைக் காண வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்குமாறு பிரதமர் மோடியைக் கேட்டுக் கொண்டார்.

இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிகளில் 1985 திம்புக் கோட்பாடுகள் நிலையான பொருத்தப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்று இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தியதையும் ஸ்ராலின் மோடிக்கு தெரியப்படுத்தினார்.

தமிழகத்தின் மூலமாக புதுடில்லிக்கு நெருக்குதல் கொடுத்து புதுடில்லி மூலமாக கொழும்புக்கு நெருக்குதல் கொடுப்பதன் வழியாக கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வைக் காண்பதே தமிழ் தேசிய பேரவையின் மூலோபாயமாகும்.

இலங்கை இன்ப்பிரச்னை தொடர்பில் மோடிக்கு கடிதம் எழுதி ஒரு மாதம் கடந்த நிலையில் முதலமைச்சர் ஸ்ராலின் மாநில சுயாட்சிக்காக இந்திய அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று பெப்ரவரி 18 தமிழ்நாடு சட்டசபையில் கோரிக்கை விடுத்தார். மத்திய - மாநில அரசுகளுக்கு இடையிலான உறவுகள் குறித்து ஆராய்வதற்காக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் தமிழ்நாடு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உயர் நிலைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் முதல் பகுதியை சபையில் சமர்ப்பித்து ஸ்ராலின் உரையாற்றினார்.

மாநில அரசின் பட்டியலில் உள்ள முக்கிய அதிகாரங்களைக் கூட அடுத்தடுத்து (மத்திக்கும் மாநிலங்களுக்கும் பொதுவான அதிகாரங்களைக் கொண்ட) ஒத்திசைவுப் பட்டியலுக்கு மடைமாற்றம் செய்யும் நடவடிக்கைகளே மத்திய அரசினால் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு, மாநில மக்களின் அடிப்படை உரிமைகளையே மத்திய அரசிடம் போராடிப் பெற வேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறோம்" என்று அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

இந்திய குடியரசின் உயிர்ப்பைத் தீர்மானிக்கும் முக்கியமான தருணத்தில் தாங்கள் நிற்பதாக கூறிய அவர் இதுவரை பயணித்த பாதையை மீளாய்வு செய்து உண்மையான கூட்டாட்சி கருத்தியல் வலுப்பெறும் வகையில் அரசியலமைப்பில் திருத்தத்தைச் செய்து எதிர்காலத்தை வடிவமைக்க வேண்டிய நேரம் இது என்றும் சுட்டிக்காட்டினார். இந்திய கூட்டாட்சியை மேலும் விரிவுபடுத்துவதற்காக மத்திக்கு நெருக்குதல் கொடுக்க மற்றைய மாநிலங்களின் ஆதரவை அவர் நாடி நிற்கிறார்.

தமிழ்நாட்டின் மூலமாக இந்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்து இந்திய அரசின் மூலமாக கொழும்புக்கு நெருக்குதல் கொடுத்து கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வைக் காணமுடியும் என்று நினைக்கும் தமிழ் தேசிய பேரவை தலைவர்கள் ஸ்ராலின் தனது உரையின் மூலமாக வெளிப்படுத்திய உணர்வில் இருந்து எதையாவது புரிந்து கொள்வார்களா?

# இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஐரோப்பிய சந்தைகளில் வாய்ப்பு

### ஜேர்மனுடன் விசேட ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 26

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை நாட்டின் ஏற்றுமதித்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜேர்மனின் இறக்குமதி ஊக்குவிப்பு முகவர் நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இதன்மூலம், இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஐரோப் பிய சந்தைகளை மிக இலகு வாக அணுகுவதற்கு இந்த உடன்படிக்கை வழிவகை செய்யும்.

குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான ஏற்றுமதியாளர்கள் மற்றும் பெண்களால் முன்னெடுக்கப் படும் வணிகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தை முறைப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## கொழும்பில் அரிய வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட மாணவன் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 26

கொழும்பு பிரபல பாடசாலை மாணவர் ஒருவர் அரிய வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளார்.

11 ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மீதொடமுல்லவை சேர்ந்த 16 வயதான ஒனெத் மெத்மிக என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் அகில இலங்கை பூப்பந்து சாம்பியன்ஷிப்பை வென்று தனது பாடசாலைக்கும் மீதொடமுல்ல கிராமத்திற்கும் பெரும் புகழை சேர்த்தவர்.

ஒனெத் ஏ.டி.ஈ.எம் எனப்படும் மிகவும் அரிய வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலை இரண்டரை இலட்சம் பேரில் ஒருவரை பாதிக்கிறது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். (அ)

## போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 905 பேர் கைது

கொழும்பு, பெப். 26

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய செயற்பாட்டிற்கமைய, போதைப் பொருள் சுற்றிவளைப்பின் போது 905 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின் போது 907 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 05 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,552 மில்லியன் டொலர்

கொழும்பு, பெப். 26

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,552 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டின் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 13.7 வீத வளர்ச்சியாகும் என அதன் தலைவர் மங்கள விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்தில் 1,552 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,165 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளதுடன், இது கடந்த ஆண்டை விட 10.5 வீத வளர்ச்சியாகும். சேவைத்துறையூடாக 367 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24.5 வீதம் என்ற பாரிய வளர்ச்சியைக் காட்டியுள்ளது. (அ)

## காலி வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

கொழும்பு, பெப். 26

காலி, கிந்தோட்டை பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கிந்தோட்டை, கிங்கங்கை மாவத்தையில் அமைந்துள்ள குறித்த வீட்டுக்கு வந்த இனந்தெரியாத குழுவினர், வீட்டின் கூரை மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்தியதுடன், பின்னர் வீட்டிற்கு முன்னால் மற்றுமொரு பெற்றோல் குண்டையும் வீசியுள்ளனர்.

கூரையின் மீது வீசப்பட்ட பெற்றோல் குண்டு வெடித்ததில், கூரையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

மற்றைய பெற்றோல் குண்டு வெடிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 26 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 14
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : தசமி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விலகும். கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**சிம்மம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகையால் வீடு களைக்கட்டும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்தை முடிப்பீர்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். சின்னச் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

# வடக்கின் விளையாட்டுத்துறை முன்னேற்றகரமான பாதையில்!



யாழ்ப்பாணம், பெப். 26

வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத்துறை பெரும் முன்னேற்றகரமான பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாகவும், புதிதாக நியமனம் பெற்றுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விளையாட்டுத்துறையை மேலும் பலப்படுத்தி முன்னகர்த்தவேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாண சபையின் விளையாட்டு உத்தியோகத்தர் தரம் மூன்று சேவைக்கு புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 11 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் விளையாட்டு உத்தியோகத்தர்கள் தரம் மூன்று சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதற்கு அமைவாக, தகுதியான 125 பேர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 20 பேர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, அவர்களில் தகுதி பெற்ற 11 பேருக்கு நேற்று நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(அ)

## யாழ். பொது நூலக நிறுவுநர் செல்லப்பாவின் ஜனன தினம்



யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்.பொது நூலக நிறுவுநர் கனகசபை முதலித்தம்பியார் செல்லப்பாவின் 130 ஆவது ஜனன தினம் யாழ்.பொது நூலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ்.நூலகர், உதவி நூலகர், நூலக பணியாளர்கள், வாசக வட்டத்தினர், கே.எம்.செல்லப்பாவின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

புத்தூர் செல்லப்பா என அழைக்கப்படும் கனகசபை முதலித்தம்பியார் செல்லப்பா, 1933 ஆம் ஆண்டில் புத்தூரில் தன்னிடமிருந்த நூல்களைக்கொண்டு சிறியதொரு நூலகத்தை ஆரம்பித்தார்.

கே.எம் .செல்லப்பா 1896 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி பிறந்தார்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் காரியதரிசியாக பணியாற்றியதோடு, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் புலமையாளராகவும் திகழ்ந்தார்.

ஆசியாவின் பெரும் நூலகத்தை வழங்கிய கே.எம்.செல்லப்பா, 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மறைந்தார். (அ)

## பாணாவெட்டி வைத்தியசாலையின் மருத்துவரை இடமாற்ற வேண்டாம்!

### பவானந்தராஜா எம்.பியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

தொல்புரம் - பாணாவெட்டி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வே.குருபரனின் இடமாற்றத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கமும் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புகளும் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

நேற்று முன்தினம் குறித்த வைத்தியசாலைக்கு விஜ ம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ்.சிறீபவானந்தராஜாவிடம் இவ்விடயம் தொடர்பான கோரிக்கை கடிதம் கையளிக்கப்பட்டது.

பாணாவெட்டி வைத்தியசாலையானது தொல்புரம், சுழிபுரம், மூளாய், பொன்னாலை, பண்ணாகம், சித்தங்கேணி உள்ளிட்ட பல பிரதேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெறும் வைத்தியசாலையாகும்.

இது பல்வேறு வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கி வருகின்றது.

இதனை பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்துமாறு தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வைத்தியர் குருபரன் இவ்வைத்தியசாலையை பொறுப்பேற்ற பின்னர் இங்கு பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இவ் வைத்தியசாலையில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வரும் அதேவேளை பொதுமக்களுக்கு சிறந்த மருத்துவ சேவையும் கிடைக்கின்றது.

இதனால் இந்தப் பணிகளை தடையின்றி முன்னெடுப்பதற்காக மருத்துவர் வே.குருபரனை குறைந்தது அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளாவது இங்கு தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்குமாறு கோரிக்கை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# யாழில் மீற்றர் வட்டிக்கு பணம் பெற்றவரின் முச்சக்கர வண்டி கத்தி முனையில் பறிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 26

சுன்னாகம் பகுதியில் மீற்றர் வட்டி பிரச்னையால் முச்சக்கர வண்டி ஒன்று கத்தி முனையில் பறிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மீற்றர் வட்டிக்கு பணத்தை வழங்கும் ஒருவர் மற்றைய ஒருவருக்கு வட்டிக்கு பணத்தை கொடுத்துள்ளார். இந்நிலையில் வாங்கிய பணத்திற்கு மேலாக வட்டி செலுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் தொடர்ச்சியாக வட்டி செலுத்தாத காரணத்தால் வட்டிக்கு பணத்தைக் கொடுத்தவர் நேற்று முன் தினம் இரவு கத்திமுனையில் வட்டிக்கு பணத்தை பெற்றவரது 17 இலட்சம் ரூபா பெறுமதியான முச்சக்கர வண்டியை கத்தியை வைத்து மிரட்டிப் பறித்து சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.நிதர்சன் தலைமையிலான குழுவினர் நேற்று அதிகாலை குறித்த சந்தேக நபரை கைது செய்ததுடன் முச்சக்கர வண்டியையும் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபைத் தேர்தல் இழுபறி;

# தெரிவுக்குழுவில் முன்னிலையாக தேர்தல்கள் ஆணைக்குழு தயார்!

கொழும்பு, பெப். 26

10 ஆண்டுகள் காலமாக இழுபறியில் உள்ள மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான பொருத்தமான தேர்தல் முறைமை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் முன்னிலையாகத் தேர்தல் ஆணைக்குழு தயாராக உள்ளது.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பாக ஏற்கனவே பல ஆய்வுகளை முன்னெடுத்துள்ள ஆணைக்குழு, அதில் சீர்செய்யப்பட வேண்டிய முக்கிய விடயங்களை அடையாளப்படுத்தியுள்ளதாக அதன் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான 11 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழு, சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்னவினால் அண்மையில் நியமிக்கப்பட்டது.

இந்தத் தெரிவுக்குழுவிடமிருந்து உத்தியோகபூர்வ அழைப்பு கிடைத்தவுடன், தேர்தல் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கடந்த 2015 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தங்கள் மற்றும் எல்லை நிர்ணய அறிக்கையில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக மாகாண சபைத் தேர்தல்கள் நீண்டகாலமாகத் தாமதமடைந்து வருகின்றன.

இந்த நிலையில், தற்போதைய தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான அடுத்த கட்ட நகர்வுக்கு மிகவும் தீர்மானமிக்கதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# நாட்டின் சுகாதாரத்துறையில் கடும் நிர்வாக நெருக்கடிநிலை!

சுகாதார பிரதி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 26

நாட்டின் பொதுச் சுகாதாரத் துறை கடும் நிர்வாக நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக சுகாதார பிரதி அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜேமுனி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள அரச சுகாதார சேவையில் 16 பிரதி பணிப்பாளர் நாயகம் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருப்பதே இதற்கு முதன்மையான காரணமாகும்.

குறிப்பாக, நாட்டின் முதன்மை மருத்துவமனையான கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நிர்வாகத் தரம் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது இந்தப் பதவிகள் அனைத்தும் பதில் கடமை அடிப்படையில் நிர்வகிக்கப்பட்டு வருவதால், கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதில் பாரிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் இறுதி அங்கீகாரம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதமே இந்தப் பின்னடைவுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நிரந்தரப் பிரதி பணிப்பாளர் ஒருவர் இல்லாத நிலையில், கேள்வி கோரல் நடைமுறைகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# 400,000 நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் உரியவர்களுக்குத் தபாலில் அனுப்பி வைப்பு!

கொழும்பு, பெப் 26

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக முடங்கிப் போயிருந்த நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் செயல்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக அச்சிடப்பட்ட சுமார் 4 லட்சம் நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் நேற்று உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் "சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக இதுவரை காலமும் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்த சாரதிகளுக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களே வழங்கப்பட்டன. அவர்களில் 4 லட்சம் சாரதிகளுக்கான நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் இன்று உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு லட்சம்

நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றையும் உரியவர்களுக்கு விரைவில் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

மேலும், 10 லட்சம் புதிய நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகளை இறக்குமதி செய்வதற்கான கொள்வனவு - கேள்வி கோரல் முடிவடைந்துள்ளதாகவும், அவை விரைவில் நாட்டுக்கு எடுத்துவரப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு; மக்களின் கருத்தறிவு ஆரம்பம்

கொழும்பு, பெப். 26

இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்டுள்ள மின்சாரக் கட்டண அதிகரிப்புத் தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது.

2026ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்காக மின்சாரக் கட்டணத்தை 13.56 வீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதி கோரி இலங்கை மின்சார சபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்திருந்தது.

இந்த முன்மொழிவு குறித்து பொதுமக்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் தங்களது எழுத்துபூர்வமான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 18ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மின்சார சபையின் இந்த முன்மொழிவை ஆய்வு செய்து ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள மேலதிக விவரங்கள் அடங்கிய ஆவணத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பொதுமக்கள் பார்வையிட முடியும். (அ)

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தை அடுத்து

# பிளாஸ்ரிக் துகள்களை அபாய பொருட்களாக வகைப்படுத்த சர்வதேச அளவில் கோரிக்கை!

கொழும்பு, பெப். 26

இலங்கை கடற்பரப்பில் இடம்பெற்ற எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் அனர்த்தத்தைத் தொடர்ந்து, பிளாஸ்ரிக் துகள்களை அபாயகரமான பொருட்களாக வகைப்படுத்துமாறு சர்வதேச அளவில் கோரிக்கைகள் வலுப்பெற்றுள்ளன.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட இந்த கோர விபத்தினால் இலங்கையின் கடற்கரைகள் மாசடைந்ததுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், சர்வதேச கடல்சார் சட்டங்களில் அவசர சீர்திருத்தங்களைக் கோரி உலகளாவிய விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச்சூழல் வல்லுநர்கள் தற்போது ஒன்றிணைந்துள்ளனர்.

"நர்டில்ஸ்" எனப்படும் இந்த சிறிய பிளாஸ்ரிக் துகள்கள், கடல் சூழலுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துபவை என சர்வதேச கடல்சார் அமைப்பால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

கப்பல் போக்குவரத்தின் போது இத்தகைய துகள்கள் கடலில் கலப்பது, கடல்வாழ் உயிரினங்களின் உணவுச் சங்கிலியைச் சிதைப்பதுடன், மில்லியன் கணக்கான பறவைகளின் உயிரிழப்பிற்கும் காரணமாக அமைகின்றன.

குறிப்பாக, இந்த துகள்கள் நச்சு இரசாயனங்களை உறிஞ்சி கடலின் பல பகுதிகளுக்குக் கடத்துவதால், மனித ஆரோக்கியத்திற்கும் பாதிப்பு ஏற்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருள் பயன்படுத்தி மீன்பிடிப்பது முற்றாக தடை

## கடற்தொழில் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டு

திருமலை, பெப். 26

லைக்கோஸ் மற்றும் டைனமைட் வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது என பிரதி அமைச்சர் ரத்ன கமகே திட்டவட்டமாகத் தெரிவித்தார்.


திருகோணமலை மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தலைமையில், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமனவின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கரைவலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு டிராக்டர்களை பயன்படுத்துவது சட்டவிரோதமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. மீனவர்களுக்கான உபகரணங்கள் வழங்கல் மற்றும் தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான நிவாரணத் திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

எதிர்காலச் சந்ததியினருக்காக கடல் வளத்தையும், நீரின் தரத்தையும் பாதுகாப்பதே அமைச்சின் முதன்மை நோக்கம் என வலியுறுத்தப்பட்டது. (அ)



# தயிர் விற்பனை செய்யும் கடைகளில் பரிசோதனை

அம்பாறை, பெப். 26

புனித நோன்பு காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் தயிர் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் தயிர் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் இடங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பொது மக்களிடமிருந்து கிடைத்த தரமற்ற தயிர் தொடர்பான முறைப்பாட்டினைத் தொடர்ந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது சந்தேகத்திற்கிடமாக அடையாளம் காணப்பட்ட தயிர் விற்பனை நிலையத்திலிருந்து தயிர் மாதிரிகள் கைப்பற்றப்பட்டு மேலதிக பகுப்பாய்விற்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.


மேலும் தயிர் உற்பத்தி செய்யப்பட்ட வெளிப் பிரதேச நிறுவனங்களின் சுகாதார நிலைமைகளை பரிசோதிப்பதற்காக அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. (அ)

# நோன்புக் கஞ்சியின் தரம் தொடர்பில் சுகாதாரப் பகுதியினர் கண்காணிப்பு

அம்பாறை, பெப். 26

புனித ரமழான் மாதத்தில் பள்ளிவாசல்களில் விநியோகிக்கப்படும் நோன்புக் கஞ்சியின் தரம் மற்றும் சுகாதாரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது களப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைய கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சுகாதார வைத்திய அதிகாரி வழிகாட்டுதலின் கீழ் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் அடிப்படையில் நேரடிப் பரிசோதனைகள் நேற்று முன் தினம் இடம்பெற்றன.



இதன்போது கஞ்சி காய்ச்சப்படும் இடங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் பாத்திரங்களின் தூய்மை குறித்து தொடர்ச்சியான சோதனைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் வழிகாட்டுதல்கள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடலுக்குள் மூழ்கும் அட்டப்பள்ளம் கிராமம்

## 500 மீற்றர் நிலம் மாயம்

அம்பாறை, பெப். 26

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாரம்பரியத் தமிழ் கிராமமான அட்டப்பள்ளம், பாரிய கடலரிப்பு காரணமாக வரைபடத்திலிருந்து மறையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் சுமார் 500 மீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பு கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடலரிப்பு காரணமாக இது வரை 20க்கும் மேற்பட்டவர்களின் தனியார் காணிகள் முழுமையாகக் கடலுக்குள் சென்றுள்ளன.



இப்பகுதியில் தென்னை உற்பத்தியையே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் ஏராளமான தென்னை மரங்கள் தினமும் கடலில் மூழ்கி வருகின்றன.

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே கடலரிப்பு காணப்பட்ட போதிலும், அண்மைக் காலமாகவே இது பாரிய அழிவை ஏற்படுத்தி வருவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அருகிலுள்ள பகுதியில் செல்வாக்குமிக்க அரசியல்வாதி ஒருவர் தன்னிச்சையாகக் கடலுக்குள் பாறைக் கற்களைக் கொட்டியுள்ளமையே, தமது குடியிருப்புப் பகுதிகளில் கடலரிப்பு தீவிரமடையக் காரணம் என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது குறித்து கரையோரப் பேணல் திணைக்களம் உள்ளிட்ட பல தரப்பினருக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். (அ)

# பண்டாரவளையில் சிசுவின் சடலம் மீட்பு; பெண் கைது!

பண்டாரவளை, பெப். 26

பண்டாரவளை, பல்லகெட்டுவ கலப்பிட்டகந்த பகுதியில் நேற்று முன்தினம் சிசு ஒன்று சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பல்லகெட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

36 வயதுடைய பல்லகெட்டுவ பகுதியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் மதியம் சுமார் 12. 40 மணியளவில் வீடொன்றுக்கு அருகாமையில் சிசு ஒன்று சடலமாக கிடப்பதாக பலகட்டுவ பொலிஸாருக்கு தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது. பின்னர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த பல்லகெட்டுவ பொலிஸ் குழுவினர் சிசுவின் சடலத்தை மீட்டதோடு விசாரணைகளை ஆரம்பித்தனர்.

சிசு கிடந்த இடத்துக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்த பெண்ணிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது குறித்த சிசு தனக்கே பிறந்ததாகவும் பிறக்கும்போதே இறந்து பிறந்ததினால் தனது வீட்டு முற்றத்தில் சிறிய குழி தோண்டி புதைத்ததாகவும், சடலத்தை நாய் வெளியே இழுத்து போட்டுள்ளதாகவும் குறித்த பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார். (அ)

# கிண்ணியாவில் சட்டவிரோத சிப்பி ஆலைகள் முற்றுகை!

## இருவர் பொலிஸாரால் கைது

திருமலை, பெப். 26

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காக்காமுனை களப்புப் பகுதியில் முறையான அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக இயங்கி வந்த இரண்டு சிப்பித் தொழிற்சாலைகளை மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முற்றுகையிட்டனர்.

இந்த அதிரடி நடவடிக்கையின்போது இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், பெருமளவிலான சிப்பிகள் மற்றும் இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன.

இதன்போது, 127 மூடை சேமித்து வைக்கப்பட்டிருந்த சிப்பிகள், 04 சிப்பி அரைக்கும் இயந்திரங்கள், குவித்து வைக்கப்பட்டிருந்த பெருமளவிலான அரைக்கப்பட்ட சிப்பிகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கிண்ணியா, காக்காமுனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருட்களுடன் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

# மட்டக்களப்பு கொட்டைமுனை பாடசாலைக்கு கணினி மையம்

## விமானப்படை அமைத்து வழங்கியது

மட்டக்களப்பு, பெப். 26

விமானப்படையினால் மட்டக்களப்பு கொட்டைமுனை கனிஷ்ட பாடசாலைக்கு ஒரு புதிய கணினி மையம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ், விமானப்படை தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மட்டக்களப்பு கொட்டைமுனை கனிஷ்ட பாடசாலை மாணவர்களுக்காக முழுமையாக பொருத்தப்பட்ட புதிய தகவல் தொழில்நுட்ப கணினி மையம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்ப கற்றல் சூழலை வழங்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

புதிய குளிரூட்டப்பட்ட கணினி ஆய்வகத்தில் 15 கணினிகள், யுபிஎஸ் அமைப்புகள் மற்றும் இணைய வசதிகள் போன்றவை உள்ளடங்கப்பட்டுள்ளன .

இதன் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு நவீன கணினி வசதிகளைப் பயன்படுத்தி கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கப்பெறும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல்...

தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் மூலம் பெறப்பட்ட தெளிவான ஆதாரங்களின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றதாகவும், மேலதிக விசாரணைகளுக்காக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவார் என்றும் பொலீஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் நேற்று நண்பகல் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

விசாரணைகளின் இரகசியத் தன்மையின் அவசியம் கருதி சாலே மீதான குற்றச்சாட்டுகள் தற்போது வெளியிடப்படாது என்றும், அவருக்கு எதிரான விசாரணை முடிந்த பின்னரே அவை பொது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் வெளியிடப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே தற்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-ஒ)

## அமைச்சர்களுக்கு...

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை களை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று நடை பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர், அவிசாவளை பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். (அ)

## மாவட்ட...

தெரிவிப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மாவட்ட செயலகத்தால் பரிந்துரைக்கப்படும் காணிகளை வனவளத் திணைக்களம் முழுமையாக விடுவிக்கவேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது காலாண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர் மற்றும் குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான நா.வேதநாயகன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத் திறன் அபிவிருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் வரவேற்புரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் மணல் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள துரித நடவடிக்கைகள் குறித்து விரிவாக விளக்கமளித்தார். கல்மடுக் குளத்திலிருந்து பெறப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்ட மணல், தற்போது கரைச்சிப் பிரதேச சபையின் ஊடாக மக்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், கடந்த "டித்வா" பேரிடரின் பின்னர் இரணைமடுக் குளத்தின் மேலதிக நீர் வெளியேறிய ஆற்றுப் பகுதிகள், அக்கராயன் மற்றும் கல்லாறு ஆகிய ஆற்றுப் பகுதிகளில் குவிந்துள்ள மணலை பிரதேச சபைகள் ஊடாகச் சேகரித்து மக்களுக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, கிளிநொச்சியிலுள்ள 5 குளங்களில் மண்ணைக் கழுவுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் சுமார் 15,000 கியூப் மணல் பெற்றுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இதனூடாக இரு மாவட்டங்களினதும் எதிர்கால மணல் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் இ.சந்திரசேகர், நடப்பு ஆண்டில் மாவட்டத்தின் அபிவிருத்திக்காகப் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ள நிலையில், அவற்றை வினைத்திறனுடன் செலவிடுவதற்கான போதிய கால அவகாசம் காணப்படுவதால், அபிவிருத்திப் பணிகளை மிகச் சிறப்பாகவும் துரிதமாகவும் முன்னெடுக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்கான பல்வேறு விடயங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி, மீள்குடியேற்ற அமைச்சின் ஊடான வீட்டுத் திட்டங்கள், கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைக்கப்பட வேண்டிய பாலங்களின் முன்னுரிமைப் பட்டியல், இடர் முகாமைத்துவத் திட்டம் மற்றும் சமூக சக்தி வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான அனுமதிகள் கோரப்பட்டபோது, பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, பொ.கஜேந்திரகுமார் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஆகியோர் தமது எதிர்ப்பைப் பதிவு செய்தனர். அதேவேளை, வன்னேரிக்குளம் சுற்றுலா அபிவிருத்தி, கௌதாரி முனையில் காணி வழங்கல் மற்றும் பொருளாதார மத்திய நிலையக் கடைகள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்களுக்குக் குழுவினால் அனுமதி வழங்கி வைக்கப்பட்டது.

வனவளத் திணைக்களத்திடமிருந்து 10821 ஏக்கர் காணியை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், வெறுமனே 1,088 ஏக்கர் காணியை மாத்திரமே விடுவிக்க வனவளத் திணைக்களம் பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பில் சுட்டிக்காட்டிய மாவட்ட செயலாளர், கோரப்பட்ட முழுமையான 10,821 ஏக்கர் காணியையும் விடுவிக்கவேண்டும் என வலியுறுத்திய நிலையில், அக்கோரிக்கைக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஏகமனதாக அனுமதி வழங்கியது. வனவளத் திணைக்களத்தால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான முழுமையான விவரங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்காலக் குடிதண்ணீர்த் தேவையைக் கருத்தில்கொண்டு, இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியும் ஒருங்கிணைப்புக் குழுவால் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயசந்திரமூர்த்தி றஜீவன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன் ஆகியோரும், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## இலங்கை...

இதனைத் தொடர்ந்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

தேர்தலை அடுத்து இலங்கையின் செயற்பாடுகள் முக்கியமாக உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகள் குறித்து இங்கு கேள்வி எழுப்பப்படுமென கருதப்படுகிறது.

நல்லாட்சி, ஜனநாயக மறுசீரமைப்பு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம், இன மத சிறுபான்மை மக்களை பாதிக்கும் விடயங்கள், இராணுவ மயமாக்கல், பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து இந்த இடையீட்டு விவாதத்தில் விவாதிக்கப்படவுள்ளன.

சர்வதேச சமூகத்துக்கு எடுத்தியம்பும் பொருட்டும் ஜனநாயகப் பெருமானங்கள், மனித உரிமைகள், நீண்ட கால ஸ்திரத் தன்மை உட்பட பல விடயங்கள் இவ்விவாதத்தில் இடம்பெறுமென அம்சி குணரத்னம் தெரிவித்தார். (அ)

## குஸ்...

போதை தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஜேர்மன் ரெக் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் இரு சிங்கள மாணவர்களின் உடைமையில் இருந்து குஸ் வகை போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இரு மாணவர்களும் தென்னிலங்கையில் இருந்து வந்து கல்வி கற்பதாகவும் ஒரு மாணவனின் உடைமையில் 1 கிராம் குஸ் பேதைப்பொருளும் மற்றைய மாணவரின் உடைமையில் 710 மில்லி கிராம் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (அ)

## மார்ச் 1 - 7...

பகுதி தேசிய போதைப்பொருள் தடுப்பு வாரமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்றிட்டத்தின் அங்கமாக குறிப்பிட்ட ஒரு வார காலப்பகுதியினுள் போதைக்கெதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், போதை ஒழிப்பு கல்வி மற்றும் நடவடிக்கைகளைச் சமூக மட்டத்தின் மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அரச திணைக்களங்கள், நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. (ஒ)

## அரசியலுக்காக...

தனது சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியாகவும் விடுதலைப் புலிகளின் புலனாய்வு வலையமைப்பைச் சிதைப்பதிலும், விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் உட்பட முக்கிய தலைவர்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கான புலனாய்வுச் செயற்பாடுகளைத் தலைமையேற்றுச் செயற்படுத்தியதிலிருந்து, கே.பி முதலான இரகசியச் செயற்பாட்டாளர்களைக் கைது செய்வது வரையான இரகசிய புலனாய்வு நடவடிக்கைகளை முன்னின்று செயற்படுத்தியவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஸ் சாலே ஆவார்.

நாட்டைப் பாதுகாக்கத் தங்கள் உயிரைப் பணயம் வைத்த அதிகாரிகள் இன்றைய அரசியல் சுழற்சியின் காரணமகப் பழிவாங்கப்படுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது.

உதித்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி விரைவாகக் கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் விசாரணைகளின் போது அரசாங்கம் உண்மையையும் நீதியையும் பின்பற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ)

## மின்சார சபை...

முன்னெடுக்கப்படுவதாக மின்சார சபையின் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த போராட்டம் காரணமாக மின்சார சபையின் நாளாந்த சேவைகள் மற்றும் பராமரிப்புப் பணிகளில் பாதிப்புகள் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சுரேஷ் சாலே...

ரஹ்மான் மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோர் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்:

"இன்று காலை சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அவர் மீது பல பாரதூரமான குற்றச்சாட்டுகள் இருந்தன. அவர் கைது செய்யப்பட்டமை வரவேற்கத்தக்கது. அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற போது கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிதான் தற்போதைய அரசாங்கத்தின் பிரதி பாதுகாப்பு அமைச்சராக உள்ளார். எனவே, இந்த விசாரணையை சரியான முறையில் முன்னெடுப்பதற்கு அவரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்-என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா:

"நிலக்கரி மோசடியை மூடிமறைப்பதற்காகவே இப்போது சுரேஷ் சலே கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான கைதுகளின் மூலம் நிலக்கரி ஊழலை ஒருபோதும் மறைக்க முடியாது. அரசாங்கம் இது குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்."-எனத் தெரிவித்தார். (அ)

## முல்லைத்தீவு...

சைக்கிள் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

அதிவேகத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க முற்பட்ட பெண்ணை மோதி தள்ளியதில் குறித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவத்தின்போது விசுவமடு புளியடி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான 53 வயதுடைய என். சுகந்தினி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். (அ)

## யாழில்...

வீதியில் நடந்து சென்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலி இராணுவ முகாமில் பணியாற்றிய ஒருவரால் கொள்ளையடிக்கப்பட்டது.

குறித்த பெண் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். இந்நிலையில் குறித்த சந்தேக நபரான, மயிலிட்டி இராணுவ முகாமில் கடமை புரியும் நபர் அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாக சி.நிதர்சன் பதவியேற்ற பின்னர் கைது நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-05)

## கச்சதீவு...

இம்முறை தமிழகத்திலிருந்து மொத்தம் 3 ஆயிரத்து 996 யாத்திரிகர்கள் வருகை தரவுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

92 விசைப்படகுகளில் 3 ஆயிரத்து 589 பேரும், 26 நாட்டுப் படகுகளில் 307 பேரும் பயணிக்கவுள்ளனர்.

தமிழகத்திலிருந்து புறப்படும் யாத்திரிகர்கள் நாளை காலை இராமேஸ்வரத்தில் முறையான சோதனைகளை முடித்துக்கொண்டு கச்சதீவு நோக்கிப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான முன்னேற்பாடாக, அவர்கள் பயணிக்கவுள்ள அனைத்துப் படகுகளையும் பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் இராமேஸ்வரத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புலிகளின் சித்தாந்தம் உயிர்ப்புடன் உள்ளது!

## பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 26

நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் பௌதீக ரீதியாக முற்றாக ஒழிக்கப்பட்டிருந்தாலும், அதனுடன் தொடர்புடைய சித்தாந்தம் உலகளவில் இன்னும் உயிர்ப்புடன் காணப்படுவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தக் கருத்துகளை முன்வைத்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் மாணவர் சங்கங்களில் உரையாற்றுவதற்காக நாமல் ராஜபக்ஷவிற்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இத்தகைய அழைப்பு மிக அரிதாக வழங்கப்படும் பெறுமதியான வாய்ப்பாகும். திறந்த உரையாடலை அடிப்படையாகக் கொண்டு இந்த அழைப்பு வழங்கப்பட்டது. ஏதேனும் பிரச்னைகள் இருந்தால் அவற்றை விவாதிப்பதற்கான சிறந்த தளமாக இது அமைந்திருக்க முடியும்.

எனினும், புலி ஆதரவு புலம்பெயர் அமைப்புகளின் தலையீடுகளின் காரணமாக, அந்த உரையாடல் நிகழ்வை ரத்து செய்ய பல்கலைக்கழக மாணவர் சங்க அதிகாரிகள் முடிவு செய்தனர்.

நாமல் ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்ட இந்த அழைப்பு மற்றும் அதன் பின்னர் அது ரத்து செய்யப்பட்ட செயல்முறையை ஆய்வு செய்த போது மூன்று முக்கிய அரசியல் உண்மைகள் வெளிப்படுகின்றன.

முதலாவதாக, நாமல் ராஜபக்ஷ உருவாக்கியுள்ள அரசியல் அடையாளத்திற்கும் அவரது ஆளுமைக்கும் உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளதை இந்த அழைப்பு உறுதிப்படுத்துகிறது.

இரண்டாவதாக, இலங்கையில் பயங்கரவாதம் பௌதீக ரீதியாக தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அதன் சித்தாந்தம் உலகளவில் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருப்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான அரசியல் முகாம் முன்னெடுத்து வரும் தேசியவாத அரசியல் கொள்கைக்குக் கிடைத்த எதிர்ப்பை, அதற்கான முக்கியத்துவத்தைக் காட்டும் விடயமாக நாம் இதை கருதுகிறோம்-என்றார். (அ)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்த்து மன்னாரில் கையெழுத்துப் போராட்டம்

மன்னார், பெப். 26

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் புதிதாக கொண்டுவரப்படவுள்ள, பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று மன்னாரில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் பேருந்து நிலையத்திற்கு முன்பாக மக்களின் கையெழுத்துக்கள் சேரிக்கப்பட்டன.

ஊடக சுதந்திரம் மதிக்கப்படவேண்டும், நீதித்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும், மனித மாண்பு பேணப்படவேண்டும், உயிர் வாழ்வதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றனர். (அ)

# இந்திய கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் நல்லகண்ணு நேற்று காலமானார்!



சென்னை, பெப். 26

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு நேற்று காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 101.

அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

நேற்று முன்தினம் அவரது உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து தீவிர சிகிச்சை பிரிவிற்கு நல்லகண்ணு மாற்றப்பட்டு அங்கு மருத்துவர்கள் கண்காணிப்பில் சிகிச்சை அளிக்கப்பட் டது. நல்லகண்ணு உடல் நலம் குறித்து முதலமைச்சர் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் நேரில் சென்று விசாரித்து வந்தனர்.

இந்த நிலையில், நல்லகண்ணு சிகிச்சை பலனின்றி காலமானார். முக்கிய உடல் உறுப்புகள் அனைத்தும் செயலிழந்ததால் நேற்று பிற்பகல் 1.55 மணிக்கு காலமானதாக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# இனப்படுகொலை காரணமாகவே நாமல் ராஜபக்ஷவின் உரை இரத்து!

## பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

லண்டன், பெப். 26

தமிழர்கள் மீது ராஜபக்ஷக்கள் நிகழ்த்திய இனப்படுகொலை காரணமாகவே, ஒக்ஸ்போர்ட் யூனியனில் நாமல் ராஜபக்ஷ நிகழ்த்த விருந்த உரை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

“ஒக்ஸ்போர்ட் யூனியன் ஏற்பாடு செய்த உரை அல்லது உரையாடல் நிகழ்வுகள் எந்தக் காரணத்துக்காகவும் இரத்துச் செய்யப்படுவதில்லை. அவ்வாறு இரத்துச் செய்வதை கருத்துச் சுதந்திரம் மீதான தாக்குதலாகவும், தன் புகழுக்கான இழுக்காகவும் அந்த நிறுவனம் கருதுகின்றது. இவ்வாறான நிலையில், நாமல் ராஜபக்ஷவின் ஒக்ஸ்போர்ட் உரை இரத்துச் செய்யப்பட்டமை அரிதான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவாகும். இதற்கு, நாமலின் குடும்பத்தால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையே காரணம்.

நாமல் ராஜபக்ஷவின் குடும்பம் தமிழர்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் சொல்லொண்ணாத் துயரங்கள் உலகறிந்தவை. அந்தப் பாதகமான செயல்களின் தொடர்ச்சியாகவே இன்றும் ராஜபக்ஷ குடும்பத்தினர் பார்க்கப்படுகின்றார்கள். அத்தகைய ஒரு பின்னணியைக் கொண்டவருக்கு உயரிய மேடைகளை வழங்குவது அறமற்றது என்பதைத் தமிழ் மாணவ சமூகம் மிகத் தெளிவாக எடுத்துரைத்தது. இதை ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் யூனியன்கள் தெளிவாக உணர்ந்துள்ளன.” - என்றுள்ளது. (அ)

# எதிர்க்கட்சி குழுக்கள் நேற்று ரணிலுடன் கலந்துரையாடல்

கொழும்பு, பொப். 26


எதிர்க்கட்சிக் குழுக்கள் நேற்று காலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டன.

எதிர்க்கட்சிகளுக்கு இடையே ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கான ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காக இச்சந்திப்பு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தரம் குறைந்த நிலக்கரி விவகாரம், பாதாள உலகக் கொலைகள் மற்றும் எரிவாயு பிரச்னை தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் உதய கம்மன்பில, அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜீ.எல்.பீரிஸ், மஹிந்த அமரவீர, சாகல ரத்நாயக்க, தலதா அத்துக்கோரள, பிரேம்நாத் சி. தொலவத்த, சுகீஸ்வர பண்டார உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)



# அமைச்சர் விஜித ஹேரத் இன்று ஜேர்மனி பயணம்



கொழும்பு, பெப். 26

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் இன்று ஜேர்மனிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஜேர்மன் - ஆசிய பசிபிக் வணிக சங்கம் பிரெமன் அத்தியாயத்தால் வழங்கப்பட்ட அழைப்பின் பேரில் ஜேர்மனுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் அமைச்சர், வர்த்தகம் மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தொடர் கூட்டங்க ளில் பங்கேற்பார் என வெளிவிவகார அமைச்சு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆசிய பசிபிக் வணிக சங்கத்தின் பிரெமன் அத்தியாயத்தின் 125ஆவது ஆண்டு விழா தொடர்பான நிகழ்வுகளில் ஆசியாவிலிருந்து கௌரவ விருந்தினராகவும், முக்கிய பேச்சாளராகவும் அமைச்சர் கலந்துகொள்ளவுள்ளார்.

ஜேர்மனியிலிருந்து கௌரவ விருந்தினராகவும், முக்கிய பேச்சாளராகவும் ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஜோஹன் வடேபுல்லும் இதில் கலந்துகொள்வார் என அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்க்கட்சி ஆதாரமற்ற குற்றச்சாட்டு நாடு சரியான பாதையில் செல்கிறது!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன கூறுகிறார்

கொழும்பு, பெப். 26

எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, நாடு சரியான பாதையில் பயணிக்கிறது பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுகக் கொள்கலன் விவகாரத்தில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. இது குறித்து பாராளுமன்றத்தில் ஏற்கனவே தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளதோடு, சுயாதீனக் குழுக்களின் விசாரணையில் முறைகேடுகள் ஏதும் நடக்கவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

மகா சங்கத்தினர் நாட்டின் வரலாறு மற்றும் மதம் சார்ந்து கருத்து தெரிவிப்பது அவர்களின் உரிமையாகும். எனினும், அரசியல் உள்நோக்கத்துடன் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் வெற்றியளிக்காது. நாட்டில் தற்போது எரிவாயு தட்டுப்பாடு நீங்கியுள்ளது. தொடர்ச்சியாக எரிவாயு விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்த காலங்களில் அரிசி மற்றும் உப்பு போன்ற பொருட்களில் நிலவிய தற்காலிகப் பிரச்னைகளுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்தில் இவ்வாறான நிலைமைகள் உருவாகலாம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.